# பவானி நகராட்சி

## திடக்கழிவு மேலாண்மை :

இந்நகராட்சியில் மொத்தம் 27 வார்டுகள் உள்ளன. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி 39225 மக்கள்தொகை ஆகும். இந்நகராட்சியில் தினமும் 10.5 MT குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. ஸ்வச் மன்ச் **(Swachh Manchh)** 2020ல் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் பிளாஸ்டிக் மற்றும் திடக்கழிவு மேலாண்மை 2016 குறித்த பணிகள் கணினியில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

**முதன்மை சேகரிப்பு விவரம்:**

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சியின் நிரந்தர துப்புரவு பணியாளர்கள | **54** |
| 2 | அயர்பணி ஒப்படைப்பு முறை துப்புரவு பணியாளர்கள | **60** |
| 3 | இந்நகராட்சி பகுதயில் மொத்தமுள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை பரப்புரையாளர்களின் கணக்கெடுப்பின் படி | வீடுகள் - 10949<br>கடைகள்- 1434<br>**மொத்தம் - 12383** |
| 4 | **குப்பை சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள்** | தள்ளுவண்டிகள் - 40 எண்ணிக்கை (வீடுகளுக்கு)<br>BOV - 20 எண்ணிக்கை |
| | | மினி ஆட்டோ (LCV) -4 |

மேற்குறிப்பிட்ட 12383 கழிவுகள் உற்பத்தியாகும் இடங்கள் தோறும் துப்புரவுப்பணியாளர்கள் நேரடியாகச் சென்று 100 சதவீதம் கழிவு உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்து மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாக சேகரிக்கப்பட்டு வருகிறது.

**இந்நகராட்சியில் உருவாகும் கழிவுகளின் வகைகள் :**

| | | |
|---|---|---|
| 1. | மக்கும் கழிவுகள் | 6.5 MT |
| 2. | பிளாஸ்டிக் மற்றும் மறுசுழற்சி கழிவுகள் | 3 MT |
| 3. | சாக்கடை மண் (Silt) | 1 MT |
| | **மொத்தம்** | **10.5MT** |

இந்நகராட்சி பகுதியில் வசிப்பவர்களில் தனிநபர் உருவாக்கும் கழிவு 273 Gram per day (Per capita waste) ஆகும்.

**இரண்டாம் நிலை சேகரிப்பு விவரம்:**

வீடுவீடாக சேகரிக்கப்படும் கழிவுகளில் மக்கும் மற்றும் மக்காத கழிவுகளை தரம் பிரித்து மக்கும் கழிவுகளை நுண் உரக்கூடத்திற்கு மினி ஆட்டோ(LCV) மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது. உலர்கழிவுகளை டிப்பர் லாரி மூலமும் தினமும் அதற்கான அமைக்கப்பட்ட சேமிப்பு மையத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு வருகிறது. இரண்டாம் நிலை சேகரிப்புக்கு மொத்தம் 4 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**மிகை கழிவுகள் உருவாக்குபவர்களின் விபரம்(Bulk Waste Generators)**

இந்நகராட்சி பகுதியில் 3 மிகைக்கழிவு உருவாக்குபவர்கள் கணக்கெடுப்பு மூலம் கண்டறியப்பட்டுள்ளனர். கணக்கெடுக்கப்பட்டவர்களில் 2 பேர் தங்கள் சொந்த இடத்திலேயே மக்கும் கழிவுகளை அப்புறப்படுத்த வசதியினை ஏற்படுத்தியுள்ளார்கள்.

மீதமுள்ள 1 மிகை கழிவு உற்பத்தியாளர் தங்கள் நிறுவனத்தில் சேகரமாகும் மக்கும் கழிவுகள் (திருமணம் மண்டபம்) அவர்களது பண்ணைக்கு அனுப்பி வைத்து அப்புறப்படுத்தி வருகின்றனர்.

**குப்பைகளை செயலாக்கம் செய்து இறுதியாக அகற்றுதல் (Decentralized Composting)**

இந்நகராட்சி பகுதியில் நுண் உரக்குடில் மையம்(Micro Composting Centre) புதிய பேருந்து நிலையம் மற்றும் தேவபுரம் ஆகிய 2 இடங்களில் மார்ச் 2019 முதல் வீடுகள் தோறும் சேகரமாகும் மக்கும் கழிவுகளை கொண்டு உரம் தயாரித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மறுசுழற்சிக்கு பயன்படக்கூடிய உலர் கழிவுகளை உள்ளூர் விற்பனையாளர்களிடம் விற்பனை செய்யப்படுகிறது. எரியக்கூடிய தன்மை கொண்ட உலர்கழிவுகள் MAK india Ltd, Erode நிறுவனத்தாருக்கு மாற்று எரிபொருளாக அனுப்பிவைக்கப்பட்டு இறுதியாக்கம் செய்யப்படுகிறது. மின்கழிவுகள் கிரின் இந்தியா ரிசைக்கிளர்ஸ் நிறுவனத்திற்கு 332 கிலோ அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**பொது கழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்கள்:**

பவானி நகராட்சிப்பகுதியில் மொத்தம் 27 வார்டுகள் உள்ளன. மொத்தமுள்ள 27 வார்டுகளிலும் கழிவறை கட்ட இடவசதி இல்லாத வீடுகளில் வசிப்பவர்கள் பயன்படுத்தும் விதமாக மொத்தம் 30 சமுதாய கழிப்பிடங்களும், 3 பொதுக் கழிப்பிடங்களும் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்துவதற்கு ஏதுவாக நல்லமுறையில் மேற்படி கழிவறைகளை தினமும் துப்பரவு பணியாளர்களை கொண்டு சுத்தம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதால் பொதுமக்கள் கழிப்பிடங்களை மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர். அனைத்து கழிவறைகளுக்கும் தண்ணீர் வசதி நகராட்சியால் வழங்கப்படுகிறது. இதன் வாயிலாக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சி திறந்த வெளி மலம் கழித்தல் இல்லாத நகராட்சியாக 19.06.2019 அறிவிக்கப்பட்டு நகரின் சுகாதாரம் நல்ல முறையில் பேணப்பட்டு வருகிறது.

**ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்குகளை தடை செய்தல்:**

பிளாஸ்டிக் பொருட்களுக்கு 01.01.2019 முதல் தடை விதித்து தமிழக அரசு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் வணிக நிறுவனங்கள் மற்றும் திருமண மண்டப உரிமையாளர்கள், பிளாஸ்டிக் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எரியப்படும் பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்தாமல் போன்றவற்றை தவிர்க்க 13.07.2018 அன்று நடத்தப்பட்ட விழிப்புணர்வு கூட்டம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் இக்கூட்டத்தில் மாற்றுப் பொருளை பயன்படுத்துவது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு மைக் செட் மூலம் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து அவ்வப்போது தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக மாற்றுப்பொருட்களை பயன்படுத்துமாறு விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது.

பவானி நகராட்சிப்பகுதியில் தொடர்ந்து நடத்தப்பட்ட ஆய்வின் போது ஒரு முறை பயன்படுத்தி துாக்கி எறியப்படும் பிளாஸ்டிக் 1871 கிலோ பறிமுதல் செய்யப்பட்டு ரூ.27,800/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேலும்இப்பொருள் தொடர்பாக அபராதக்கட்டணங்கள் குறித்து ஈரோடு மாவட்ட அரசிதழ் எண்: 24, ஜீலை 25 2019 ஆம் தேதியன்று வெளியிடப்பட்டுள்ளது. 22.07.2019ஆம் தேதி முதல் 27.09.2019 ஆம் தேதி வரை 1586 கிலோ பிளாஸ்டிக்கள் பறிமுதல் செய்யப்பட்டது. நகர் பகுதி முழுவதும் பிளாஸ்டிக் தடை குறித்து நகராட்சியின் மூலம் தொடர்ந்து விழிப்புணர்வு செய்யப்பட்டு வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**ஆணையாளர்,**
**பவானி நகராட்சி**